ஓம் சரவணஜோதியே நமோ நம

## ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

01.01.2026

1. வேலவா ஞான வள்ளலாக அருளி
வெற்றிமுகம் காட்டும் முருகா
காலனை வெல்லும் மார்க்கத்தை
கருணை கொண்டு அருளிய முருகா

2. முருகா உமை போற்றி இனிதே
மொழிகுவேன் ஆறுமுக அரங்கனும்
வரமாக விசுவாவசு சிலை திங்கள்
வழங்குவேன் சூலவாம் குருவார அருளாசி

3. ஆசிதனை ஆங்கிலப் புத்தாண்டில்
அகிலம் பாதுகாப்பு காணவும்
நேசமுள்ள பண்புள்ள மக்களாக
நிலமதனில் ஞானப்படைகளாகவே மாற்றம்

4. மாற்றம் காண யானும் உரைப்பேன்
மக்களெல்லாம் ஓங்காரக்குடிலை
ஆற்றல்பெற அணுகி வந்து
அரங்கனென் ஜோதி வழிபாடு செய்து

5. செய்துமே குடிலின் அமுதுண்டு
சிறப்பான அன்னதானமதில்
அய்யமற பொருளுதவி செய்து
அரங்கன் என் சீடன் ராம்குமார் கரம்பட

6. கரம்பட தீட்சை ஏற்று
கணக்காய் சைவ நெறிபட
வரம்தரும் முழுமதி பூசையில்
வருகைதனை மாதாந்திரம் செய்து

7. செய்துமே அரங்கா முருகா என
செபதபங்கள் செய்து கொண்டு
மெய்யுடனே சன்மார்க்க வழியை
முழுமைபட ஏற்று வருகவே

8. வருகவே வளர்ச்சி காணும்
வருங்காலம் ஞானிகள் துணைபட
தருமசிந்தை தெளிவு திடமும்
தயவு பலமும் கூடி இனிதே

9. இனிதே ஆரோக்கியம் பலமும்
இல்லறமுடன் சர்வவல்லமையும்
கனிவேலவன் உடனிருக்கவே
கலியினில் இடர்களை கடந்து

10. கடந்துமே அமைதி பாதுகாப்பு
கவலை என்பதே இல்லாதபடி
தடையின்றி தேட்டு தனபலமும்
தருமபலமும் கூடி சிறப்பர்

11. சிறப்பான வாழ்வும் வளமும்
சேவைக்கான அவசியம் தானும்
மறுப்பின்றி விளங்கி மாற்றம்
மகான் அரங்கன் என்னால் நடந்தேறும்

ஆறுமுக அரங்கன் என் குருவார அருளாசி முற்றே.

—சுபம்—

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி